# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>பட்டா உட்பிரிவு மாற்றம் செய்ய விவசாயிடம் லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது</u>

புகார்தாரர் திரு.ராமதாஸ் என்பவர் வனத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறார். இவர் தற்போது ரூபநாராயணா நல்லூர் கிராமம், விருத்தாச்சலம் தாலுக்கா, கடலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார், இவர் மற்றும் இவரது கிராமத்ததை சேர்ந்த 6 பேர் இலவச வீட்டுமனை பட்டா பெற்றுள்ளனர். மேற்படி பட்டாவினை உட்பிரிவு செய்யவும் மற்றும் கிராம வருவாய் பதிவேட்டில் பதிவு செய்யவும் புகார்தாரரையும் சேர்த்து மொத்தம் 7 பேருக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.சுப்பிரமணியன், கிராம நிர்வாக அலுவலர், பள்ளிப்பட்டு கிராமம், விருத்தாச்சலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் ஒவ்வொரு விண்ணபத்திற்கும் தலா ரூ.2,500/- வீதம் ரூ.17,500/- தனக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். தங்களால் அவ்வளவு பணம் லஞ்சம் கொடுக்க இயலாது என புகார்தாரர் கூறியதால் லஞ்ச தொகையினை ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.2,000/- வீதம் ரூ.14,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கடலூர் பிரிவில் புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நேற்று 28.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து உடனடியாக வாங்காமல் விருதாச்சலம் பேருந்து நிலையத்திற்கு வருமாறு கூறி, பின்னர் இன்று வேண்டாம் நாளை வாருங்கள் என கூறியுள்ளார். இன்று 29.12.2022 திரு.சுப்பிரமனியன், கிராம நிர்வாக அலுவலர், தனது அலுவலகத்திற்கு வரச்சொல்லி லஞ்ச பணமான ரூ.14,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

## PRESS NOTE

## VAO ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR SUBDIVISION OF PATTA FROM FARMER

The complainant Tr.Ramadoss, farmer is a retired Forest watcher, residing at Rooba Narayana Naloor Village, Virudachalam Taluk, Cuddalore District. He along with 6 other villagers had received free house Site pattas. The complainant had given 7 applications, one for himself and 6 others of his village at Virudhachalam Taluk, Cuddalore District for subdivision of patta and for making relevant entries in village records. For recommending subdivision of patta and for making relevant entries in Village Revenue records, Tr.Subramani, Village Administrative Officer, Pallipatti Village, Virudhachalam Taluk, Cuddalore District demanded Rs.2,500/- rupees as bribe for each application and later reduced the amount to Rs.2,000/- each. The complainant had pleaded that they cannot give so much amount of bribe but the VAO refused to need to their request. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Cuddalore detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized on 28.12.2022. The Village Administrative Officer asked the complainant to come to Virudhachalam bus stand with the bribe money but later asked him to come on 29.12.2022. Today i.e., on 29.12.2022, Tr. Subramani, Village Administrative Officer, asked the complainant to come to his office and received the bribe amount of Rs.14000/- from the complainant in his office. The accused was arrested.